# மண்ணெண்ணெய் நஞ்சூட்டம்

## (KEROSENE OIL POISONING)



மண்ணெண்ணெய் அதிகமான வீடுகளில் பயன்படுத்தப்படும் ஒரு இன்றியமையாத பொருளாகும்.

அத்துடன் தவறுதலாக மண்ணெண்ணெய் அருந்துவதன் மூலம்
வைத்தியசாலைக்கு அனுமதிக்கப்படும்
சிறுவர்களின் எண்ணிக்கையும் அதிகமாகும்.

எனவே மண்ணெண்ணெய் நஞ்சூட்டம் எனும் விரும்பத்தகாத நிகழ்வினைத் தவிர்ப்பது பற்றி அனைவரும் அறிந்திருக்க வேண்டியது அவசியமாகும்.

சிறுவர்கள் தவறுதலாக மண்ணெண்ணெய் அருந்தியிருப்பின் வாந்தி எடுக்க செய்ய வேண்டாம், உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லவும்.

## மண்ணெண்ணெய்

இலகுவில் ஆவியாகும் தன்மையுடைய, குறைந்த பாகுமையுடைய, ஒரு திரவ பெற்றோலிய எரிபொருளாகும்.

சாதரணமாகப் பயன்படுத்தும் மண்ணெண்ணெய் வேறு பல நச்சுப் பொருட்களையும் சேர்த்தே தயாரிக்கப்படுகின்றது.

இவ்வியல்புகள் காரணமாக மண்ணெண்ணெய் நச்சுத் தன்மையைக் கொண்டிருப்பதுடன் இலகுவில் உடலின் சீதமென்சவ்வுகளில் வேகமாகப் பரவும் தன்மையையும் கொண்டுள்ளது.

## மண்ணெண்ணெய் நஞ்சூட்டம் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்கள்

- வாய் வழி மூலம் அருந்துதல்.
- சுவாசிப்பதன் மூலம்
- கண்களில் தெறிப்பதன் மூலம்.
- தோலின் மூலம்

## மண்ணெண்ணெய் நஞ்சூட்டம் மூலம் ஏற்படக் கூடிய விளைவுகள்

- உணவுக் கால்வாய்த் தொகுதி,
- சுவாசத் தொகுதி,
- நரம்புத் தொகுதி,
- கண்கள்,
- தோல்,
- சுற்றோட்டத்தொகுதி

என்பனவற்றில் பாதிப்புக்கள் ஏற்படுதல்.

## மண்ணெண்ணெய் நஞ்சூட்டம் ஏற்படுவதனால் ஏற்படும் அறிகுறிகள்

- வாய், தொண்டை எரிவு
- வயிற்றுப் பிரட்டல்
- வாந்தி
- வயிற்றோட்டம்
- பசியின்மை
- மூச்சுத் திணறல்
- புரக்கடித்தல்
- இருமல்
- காய்ச்சல்
- தலைவலி
- தலைச்சுற்றல்
- மயக்கம்
- கண் பார்வை பாதிக்கப்படுதல்
- தோல் அரிப்பு, எரிவு
- வலிப்பு
- கோமா

மண்ணெண்ணெய் அருந்தும் போது அது சுவாசப்பையினுள் செல்வதற்கான சந்தர்ப்பங்கள் அதிகமாகும்.

இந்நிலை வாந்தி எடுக்கும் போது அல்லது வாந்தி எடுக்கத் தூண்டும் போது மேலும் அதிகரிக்கின்றது.

இவ்வாறு செல்லும் மண்ணெண்ணெய் சுவாசப்பை மேற்பரப்பில் பரவுவதனால் சுவாசப்பையினுள் நீர் உருவாகின்றது. இதனால் சுவாசப்பை அழற்சி ஏற்படுகின்றது.

அழற்சி ஏற்பட்ட சுவாசப்பை இலகுவில் கிருமித் தொற்றிற்கு உள்ளாகின்றது. இதனால் உடல் நிலை மேலும் மோசமடைகின்றது.

எனவே மண்ணெண்ணெய் நஞ்சூட்டத்திற்கு உடனடியான வைத்திய சிகிச்சை அவசியமாகும்.

## மண்ணெண்ணெய் நஞ்சூட்டம் ஏற்படும்போது செய்ய வேண்டியவை

- எந்த விதமாக மண்ணெண்ணெய் நஞ்சூட்டம் ஏற்பட்டு இருப்பினும் உடனடியாக வைத்திய உதவியை நாடவும்.

- மண்ணெண்ணெய் அருந்தியிருப்பின் பால், சவர்க்கார நீர் என்பவற்றைக் கொடுத்து வாந்தி எடுக்கத் தூண்ட வேண்டாம். வாந்தி எடுத்தல் சுவாசப்பை அழற்சி ஏற்பட வாய்ப்பளிக்கின்றது.

- மண்ணெண்ணெய் நஞ்சூட்டம் சுவாசித்தலினால் ஏற்பட்டிருப்பின் உடனடியாக அவ்விடத்தை விட்டு அகற்றி சுத்தமான காற்றை சுவாசிக்கச் செய்யவும்.
- கண்களில் தெறித்திருப்பின் கண்களை நன்கு திறந்து வைத்து தண்ணீரினால் நன்கு கழுவவும்.
- தோலில் பட்டிருப்பின் சவர்க்காரம், நீர் கொண்டு நன்கு கழுவவும்.

## மண்ணெண்ணெய் நஞ்சூட்டம் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக.......

- மண்ணெண்ணெய் கொள்கலனை சிறுவர்களிற்குத் தெரியாத, அவர்களினால் எடுக்க முடியாத இடத்தில் வைக்கவும்.
- மண்ணெண்ணெயினை சோடா மற்றும் உணவுப் பொருட்களினது போத்தல்களில் வைத்திருக்க வேண்டாம்.
- மண்ணெண்ணெய் கொள்கலனை தரையில் வைக்க வேண்டாம். இயலுமான வரை உயரமான இடத்தில் வைக்கவும்.
- மண்ணெண்ணெய் கொள்கலனை நீங்கள் அதிகமாகப் பயன்படுத்தாத பூட்டுள்ள அறையில் அல்லது பூட்டுள்ள அலுமாரியில் வைக்கவும்.

- மண்ணெண்ணெய் கொள்கலனை உணவுப் பொருட்கள் வைத்திருக்குமிடத்தில் வைக்க வேண்டாம்.

- மண்ணெண்ணெய் கொள்கலனை நன்கு இறுக்கமான மூடியினால் மூடி வைக்கவும்.

- மண்ணெண்ணெய் எடுப்பதற்கு இறப்பர் குழாய் பயன்படுத்தும் போது வாயினால் உறிஞ்சி எடுப்பதைத் தவிர்க்கவும். பிரதானமாக சிறுவர்களின் முன்பாக அவ்வாறு செய்வதனைத் தவிர்க்கவும்.

- மண்ணெண்ணெய் இருக்கும் இடத்தில் சிறுவர்களைத் தனியே விட்டுச் செல்ல வேண்டாம்.

- மண்ணெண்ணெயினை பாவனைக்கு எடுக்கும் போது சிறுவர்களிற்குத் தெரியாது எடுக்கவும்.

- சிறுவர்களிற்கு மண்ணெண்ணெய், மற்றும் நஞ்சுப் பொருட்கள் பற்றி, அவற்றின் நச்சுத்தன்மை, உட்கொண்டால் ஏற்படும் விளைவுகள் பற்றி விளங்கப்படுத்தவும்.

*By:*
Ms. S. Gunaretnam,
Faculty of Medicine,
University of Jaffna.

அனுசரணை:
"kay-Vi-Tee"
65, Stanley Road,
Jaffna.